மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1:25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 புரட்டாதி 25 ஸபர் 6 இதழ் 243

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11-10-1986

யாழ். கோட்டை முகாமிலிருந்து வெளிவந்த

## இராணுவம்மீது புளொட் போராளிகள் தாக்குதல்

### படையினரின் 'ஷெல்' அடிக்கு 3 பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவம் சுப்பிரமணியம் பூங்கா, நூல்நிலையவீதி என்பவற்றுக்கூடாக கால்நடையாக முன்னேறிக்கொண்டிருந்தமையைக் கண்ட 'புளட' போராளிகள் நிலக்கண்ணிவெடிகளை வெடிக்கச்செய்தும், துப்பாக்கிச்சமரில் நேரடியாக ஈடுபட்டும் இராணுவத்தினரைகோட்டைக்குப் பின்வாங்கிச்செல்லச் செய்தனர்.

முகாமுக்குள் பின்வாங்கிச் சென்ற இராணுவம் ஷெல் அடித்ததினால் மூவர் காயங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். நீண்ட நாட்களின்பின் நேற்று ஷெல் தாக்குதல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

நேற்றுக் காலை 11மணியளவில்

[5ம் பக்கம் பார்க்க]

திருமலை மாவட்டத்தில் தமிழ் மக்கள்

## படுகொலை செய்யப்படுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்

அமிருக்கு இந்திய வெளியுறவுச் செயலாளர் உறுதி

சென்னை, ஒக்டோபர் 10.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாகத் திருமலை மாவட்டத்தில் அப்பாவிப் பொதுமக்கள் இராணுவத்தினரால் தொடர்ச்சியாகக் கொலை செய்யப்படுவதுடன், வீடுகள், கோவில்கள், விமானக்குண்டுவீச்சு, பீரங்கிப்படகிலிருந்து "ஷெல்" தாக்குதல் ஆகியவற்றால் சேதப்படுத்துவது தொடர்பாக உறுதியான சாதகமான நடவடிக்கை எடுக்கப்படுமென இந்திய வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் தம்முடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பேசிய தமிழர் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்திற்குத் தெரிவித்துள்ளார்.

[5ம் பக்கம் பார்க்க]

● இந்திய மத்திய அரசின் பிரதிநிதிகளுடன், தமிழக குழு

# இலங்கையின் தற்போதைய நிலை பற்றி ஆய்வு

சென்னை, அகடோபர் 10

இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாகத் தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி இராமச்சந்திரன, நிதியமைச்சர் இரா- நெடுஞ்செழியன், மின்சக்தி அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் ஆகியோர் இந்திய சீர்திருத்த இணை அமைச்சர் பி சிதம்பரம் வெளியுறவுச் செயலாளர் ஏ. பி. வெங்கடேஸ்வரன் ஆகியோருடன் ஒரு மணித்தியாலமாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச் சந்திப்பின்போது இந்திய மத்திய அரசின் பிரதிநிதிகள், இலங்கை அரசாங்கம் கடைசியாகச் சமர்ப்பித்துள்ள யோசனைகளில் காணப்படும் சசப்டான அம்சங்கள் பற்றியும், தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் பிரதி பலிப்பு பற்றியும் தமிழகக்குழுவுக்கு விளக்கிக் கூறினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் மாற்று யோசனைகள் பற்றியும் எடுத்துக்கூறிய புதுடில்லி அதிகாரிகள் கொழும்பு, சென்னை, புதுடில்லி ஆகிய இடங்களில் மிகவும் நுணுக்கமாக ஆராயப்பட்டகூட்டணியினரின் யோசனைகள் பற்றி சில முடிவுகள் எடுக்கப்பட்டதாகவும் கூறினர்.

இச்சந்தர்ப்பத்தில் புதுடில்லி அதிகாரிகள் இலங்கை அரசின் யோசனைகளையிட்டு தமிழ்ப் போராளிகள் குழுத்தலைவர்களுடன் சேச்சுவார்த்தை நடத்துமாறு முதலமைச்சரைக் கோரினர். இந்த யோசனைகளை முழுமையாக மறுக்கவேண்டாமெனவும், யோசனைகளில் தெரிவிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கம் பற்றிக் கவனமாக ஆராயும்படியும் அவர்

[8ம் பக்கம் பார்க்க]

### இனப்பிரச்னை ராஜீவ் - எம். ஜி. ஆர். பேச்சு

புதுடில்லி, அக் 10

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம் ஜி இராமச்சந்திரன் இந்தயப் பிரதமரி

[5ம் பக்கம் பார்க்க]

## "உயிரைக் காப்பாற்ற உடன் வெளியேறுங்கள்"

### இராணுவம் எச்சரிக்கை

யாழ்ப்பாணம். சனி

"எமது ஆயிரம் மீற்றர் எல்லைப்புறத்தைவிட்டு உங்கள் உயிர்களைக்காப்பாற்றிக் கொள்ள வெளியேறுங்கள். இராணுவமுகாம்களில் பாரிய பீரங்கிகளைப் பொருத்தியுள்ளோம் சகோதர, சகோதரி, அப்பாவிமக்களே, தாய்மார்களே உங்கள் உயிரைக்காப்பாற்றிக் கொள்ள உடன் ஆயிரம் மீற்றர் எல்லையை விட்டு வெளியேறுங்கள்."

இவ்வாறு கோட்டை இராணுவ முகாமிலிருந்து தமிழிலும், சிங்களத்திலும் பல தடவைகள் ஒலிபெருக்கி மூலம் நேற்று பொதுமக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பொன்று விடுக்கப்பட்டது.

இவ் அறிவித்தலையடுத்து யாழ். நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டன நகரில் பல்வேறு நோக்கங்களுடனும் வந்து நின்ற பொதுமக்கள் ஷெல் தாக்குதலையும் இவ்வறிவித்தலையும் கேட்டதும்நகரைவிட்டு வெளியேறினர். சில நிமிடநேரத்தில் நகர் வெறிச் சோடிக்காணப்பட்டது.

(5ம் பக்கம் பார்க்க)

ஆயிரத்துக்கும் மேற்பட்ட

## இராணுவம்-பொலிஸாரால் வவனியாநகர் பலத்தசோதனை

வவனியா வெள்ளி

வவனியா நகர்நேற்றுக்காலை சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவம்-பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டு இரண்டு மணி நேரம் பலத்த சோதனையிடப்பட்டது

இதன்போது ஒலிபெருக்கி மூலம் வீடுகள் கடைகளிலிருந்த சகலரையும் குறிப்பிட்ட ஓர் இடத்திற்கு வருமாறு அழைக்கப்பட்டு அங்கு சகலரும் தடுத்துவைக்கப்பட்டனர்.

நகரின் முக்கிய நுழைவாயில்களில் பலத்த சோதனை நடத்திய இராணுவம் ஏனைய பகுதிகளிலிருந்து நகரினுள் பொதுமக்களை அனுமதித்தது ஆனல் நகரிலிருந்து எவரையும் வெளியே செல்ல அனுமதிக்கவில்லை.

(8ம் பக்கம் பார்க்க)

## கொர்பசேவ் றீகன் உச்சிமாநாடு இன்று

ரெக்சாட் அக்டோபர் 11

அமெரிக்க ஜனதிபதி றேகனுக்கும் கொர்பசேவுக்கும் இடையில் நடைபெற இருக்கும் அணு ஆயுத பாவனை, மற்றும் சர்வதேச உலக விவகாரங்கள் பற்றிய மாநாடு இன்று ஐஸ்லாத்தில் ஆரம்பமாகிறது.

இம்மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க ஜனதிபதி றேகன் ஏற்கனவே ஐஸ்லாந்து சென்றுள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## அறிவித்தல்

(பெயர் மாற்றம்)

கடந்த பல காலங்களாக

Intersun Group

என்ற பெயரில் பிரயாண ஒழுங்குகளை மேற்கொண்டுவந்த எமது ஸ்தாபனம் 8-10-1986 (புதன்கிழமை) தொடக்கம்

✶ GLORIA TRAVELS ✶

என்ற புதிய பெயருடன் இயங்கும் என்பதை சகலருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

GLORIA TRAVELS,

சின்னத்தம்பி அவெனியூ,

மானிப்பாய்.

[A-1441]

கோட்டை இராணுவம்மீது—

## விடுதலைப்புலிகள் 6 அங்குல 'ஷெல்' தாக்குதல்

பின்லாந்து நிருபரும் சம்பவம் நடந்த இடத்தில் நின்றூர்

யாழ்ப்பாணம், சனி

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றுப் பிற்பகல் ஏவிவிடப்பட்ட ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கெரில்லாப் படையினர் ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 6 அங்குல ஷெல் தாக்குதலைத் தொடர்ந்து ஹெலிகொப்டர் ஒன்று வானுயரப் பறந்து வந்து மண்டைதீவு முகாமில் இறங்கி மீண்டும் பலாலி முகாம் நோக்கிச் சென்றது.

இதனுல் கோட்டை இராணுவத்தினர் தரப்பில் சேதம் மேற்பட்டிருக்கலாம் என நம்

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மைசூர் அரிசி நம்பர் 1 கல்லில்லாதது. சுத்தமானது தரமானது, சுவையானதும் கூட கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது உங்கள் சகல தேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும். மைசூர் அரிசியையே கேட்டுவாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். மைசூர் அரிசி ஆலை, புனித அன்னம்மாள் கோவில்வீதி, மானிப்பாய். [C-5042]

பெரிய அளவிலான செப்பு பித்தளை, அலுமினியக்கிடாரம், வெங்கல அசையாமணி, திருவாசி, குத்துவிளக்கு, பூச்சாடி, மெழுகுவர்த்தி ஸ்ராண்ட், தூபி, வேல், சூலம், கெண்டி, தூக்குவிளக்கு, சருவக்குடம், பொங்கல் சருவம், கும்பச்செம்பு, நிறைகுடம் செட், யப்பான்-இந்திய றேவைகள், எவர்சில்வர் அன்பளிப்பு பாவனைப்பொருட்கள் மற்றும் C 50 ஹொண்டா, C 50 ஹொண்டா Chaly மோட்டார் சைக்கிள்களும் தொடர்பு: ஸம்ஸ், 26B, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் கிளை: 76/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C 5113)

அரியாலை மேற்கு கலைமகள் வீதியில் (காந்தி சனசமூக நிலையத்துக்கருகில்) உள்ள காணி ஒன்றே கால் பரப்பு (1¼) உடன் விற்பனைக்குண்டு விலை முழுவதும் 65 000/- தவணை முறையிலும் செலுத்தலாம். ஐ பொன்னுத்துரை, 19 புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர், யாழ்நகர். A-1446

சாவகச்சேரி கல்வயலில் சகல பிரயோசனங்களும், மின்சார வசதியும் கூடிய 12½ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு விபரம்: க சிவசிதம்பரம் 16/7, கலட்டி அம்மன் கோவிலடி, சீனியர்லேன், யாழ்ப்பாணம். (C-5034)

குளிர்சாதனப்பெட்டி [Usha Refrigerator] ஒன்று உடன் விற்பனைக்குண்டு தொடர்பு; சிற்றி சொப், 18/2, விதானையார் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். [C 5147]

இறக்குமதி செய்யப்பட்ட வறுத்த சேமியா விற்பனைக்குண்டு. M G M, 777 K K S Road, Jaffna T P 22611. C-5070

தேக்கு அல்மாரி, கட்டில்கள், Foam மெத்தைகள், Show case, Formica சாப்பாட்டு மேசைகள், Baby cot, Dinner set கிளாஸ் பீக்கான், சில்வர், Sanyo 5 Speaker கசற் றேடியோ, Box Speakers, National T. V கசற் றேடியோவுடன், பெல்ஜியம் முகம் பார்க்கும் கண்ணாடிகள், Singer மெஷின், மற்றும் பல உடன் விற்பனைக்கு 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம், St. Charles பாடசாலை அருகில். (C-5141]

## சேவை

மோட்டர், மின்விசிறி, அடுப்பு, ரான்ஸ்போமர், கிறையின்டர், வாசிங்மெஷின் ஸ்ராட்டர், றிப்சுவிச் ஆகியன உத்தரவாதத்துடன் திருத்த றீவயின்டிங் செய்ய, Omega, Manipay Road, Jaffna. [ஈழநாட்டுக்கு எதிரில்]. (C-5038)

## மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்துவேளாள தாரமிழந்த மணமகனுக்கு 34 — 38 வயதுக்கிடைப்பட்ட மணப்பெண் தேவை தாரமிழந்தோரும் விண்ணப்பிக்கலாம். யாழ்ப்பாண கத்தோலிக்க கரையாம் இனமணமகனுக்கு 32 — 39 வயதுக்கிடைப்பட்ட மணப்பெண் தேவை. 'மங்கள ஏஜென்சி சொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். C-5094

யாழ்ப்பாணத்தில் அரசாங்க உத்தியோகம் பார்க்கும் இந்து உயர் வேளாள குல 31 வயதுடைய பெண்ணுக்கு பெற்றோர் அதே குலத்தில் மணமகன் தேடுகின்றனர். கிரகபாவம் 32 தொடர்பு:268/5. நாவலர் றோட், ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். [C 5.46

## தேவை

ஆண், பெண் உதவியாளர் றபர் சீல் செய்வதற்குத் தேவை. பிறந்த திகதியுடன் 23 - 10 - 86 க்கு முன் விண்ணப்பிக்கவும்; மேர்வின்ஸ், 91/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். C-5133

ரீமேக்கர், றோல்ஸ், பற்றிஸ் தயாரிக்க நல்ல அனுபவமுள்ளவர்கள் உடன் வேலைக்குத் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். தொடர்பு: றிக்கோ ஹோட்டல், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C 5148]

### இலவசமருத்துவ சிகிச்சை

சகல நோயாளர்களும் பார்வையிடப்படுவர்

இடம்:

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி

காலம்: 12-10-86

ஞாயிற்றுக்கிழமை

காலை 9-00 மணி

**வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்**

C 5047

## பயிற்சி

தொழில் பயிற்சி - Telex and I. D. D. (Operators International (இருபாலரும்) Radio Officers Ship P M G. குறிப்பிட்டளவு அனுமதிகள் மாத்திரம். ஆரம்பம்: 22 - 10 - 1986 Electros Thirunelvely Junction. C-5144

## வகுப்புகள்

பௌதிகவியல்: N. பத்மநாதன் B. Sc. (Hons) 87 Batch; 11-10-86 முதல் அலகு 5: 'புலங்கள்' நாகலிங்கம் இன்ஸ்ரிரியூட், திருநெல்வேலி. (C 5117)

108 Brown Road, A/L 87, பொது இரசாயனம் ஆசிரியர்: சத்தீஸ். ஆரம்பம்: 11-10-86 சனி 2-30 p m. நேரம்: சனி, ஞாயிறு 2-30-4-30 p. m [C5112]

யாழ். நுண்கலைக் கல்லூரியில் விஜயதசமி தினமாகிய 12-10-86 ஞாயிற்றுக்கிழமை அன்று மாலை 3-00 மணி தொடக்கம் 5-00 மணிவரை வாய்ப்பாட்டு, வயலின், மிருதங்கம், பரதநாட்டியம் முதலிய இசைக்கலைகளைப் பயில விரும்பும் மாணவர்க்கு வித்தியாரம்பம் செய்துவைக்கப்படும். தொடர்பு: மு. கண்ணன், 646, கே.கே எஸ் வீதி. நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். [C 5104]

9 மாத டிப்ளோமா மனையியல் வகுப்புக்கள், கேக் ஐசிங், சமையற்கலை தையற்கலை, பூவேலை, கைவேலை, கோலம் கூந்தல் அலங்காரம், வர்ணம் தீட்டுதல், ஆங்கிலம், முதலுதவி வகுப்புக்கள். ஆரம்பம்: 15-10-86, Ladies' Academy (Regd), Victoria Road, Jaffna. (C 5067)

பயிற்சிபெற்ற ஆங்கில ஆசிரியரினால் 4ம் ஆண்டிலிருந்து 9ம் ஆண்டு வரையிலான ஆங்கில வகுப்புகளுக்கு உடனடியாகப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். தொடர்புகளுக்கு; 11, அரசடி ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (C 5051)

8ம் ஆண்டிற்கான G A.Q வெளிவாரி பட்டப்படிப்புக்கள் ஆரம்பமாகிவிட்டன பல்கலைக்கழக பதிவுகளைப் பெற விரும்புவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: S அருள்நங்கை, உயர்கலைக் கல்லூரி, 73, ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். [A 1424]

மோட்டர் வைண்டிங், வயறிங் City and Guilds பயிற்சிகள் 15 - 10 - 86 ஆரம்பம் இன்னும் சில வெற்றிடங்களே உள்ளன. Omega, Manipay Road, Jaffna. (ஈழநாட்டிற்கு எதிரில்) C-5132

Home Science Diploma Course, Montessori Diploma Teachers Training Course New batches 87, ஜனவரி 87-ல்ஆரம்பமாகும். 3 -10-86 க்கு முன் நேரில் விண்ணப்பப்படிவத்தை பெற்றுக் கொள்ளவும்- அதிபர், உயர் கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். C-5096

வயலின், வாய்ப்பாட்டு, வீணை, மிருதங்கம், இசை, வகுப்புக்கள் வருகிற 12 - ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11-00 மணியளவில் விஜயதசமிதினத்தில் ஆரம்பிக்கப்படும். வகுப்புகள் நடைபெறும் இடம் 'புகலிடம்' ஸ்டேசன் ஒழுங்கை சாவகச்சேரி தொடர்பு: P இராசரத்தினம், ஸ்டேசன் ஒழுங்கை, சாவகச்சேரி. C-5041

## வகுப்புகள்

G S Q (Bio), B.Sc (Bio) (Chemistry Botany, Zoology) G. A Q and B A. (Arts) நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. G S Q, and B Sc Bio) G S Q B Sc. (Maths (Pure, Applied, Statistics or Physics, Chemistry) New batches 87/88 ஜனவரி 87 முதல் வாரத்தில ஆரம்பமாகவுள்ளன. 31 - 10-86 க்கு முன் நேரில் விண்ணப்பப் படிவத்தை பெற்றுக் கொள்ளவும் அதிபர், உயர்கலைக்கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். C-5095

## வாடகைக்கு

இருபாலைச்சந்தி - கோண்டாவில் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய ஹோட்டல் வாடகைக்கு அல்லது கொமிஷன் அடிப்படையில் கொடுப்பதற்குண்டு. தொடர்பு: த சிவபாதம், கோண்டாவில் வீதி, இருபாலை, கோப்பாய். C-5062

## அறிவித்தல்

### மின்தடை

இலங்கை மின்சாரசபையினரால் சில அத்தியாவசிய திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் 12-10-86 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி முதல் மாலை 5-00 மணி வரையும் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற பட்டணப் பிராந்திய உப மின் நிலையத்திலிருந்து மின்சாரம் பெறும் பாவனையாளர்கள் தவிர்ந்த ஏனைய பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகிறது.

சி. வீ. கே. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ் மாநகராட்சி மன்றம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
9-10-86 [C 1453]

### முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி தர்ஷனு**

மீசாலை வடக்கு தர்மபாலன் சாந்தி தம்பதிகளின் செல்வப் புதல்வி தர்ஷனு தனது 1-வது பிறந்ததினத்தை (இன்று) 11-10-86 ஜேர்மனியில் கொண்டாடுகிறார் தர்ஷனு சகல செல்வங்களும்பெற்று நீடூழி வாழ்கவென்று ஜேர்மனியிலுள்ள அம்மா, அப்பா, நாதன் சித்தப்பா, பெரியம்மா, பெரியப்பா, மனோஜ் மச்சான் மற்றும் உறவினர்கள் அன்புடன் வாழ வாழ்த்துகிறார்கள்.

[C 5150]

### முதலாவது பிறந்ததின வாழ்த்து



**செல்வன் மனோகரன் மோகனப்பிரகாஸ்**

மானிப்பாய் மார்க்கட் கிழக்கு ஒழுங்கையைச் சேர்ந்த மனோகரன் மல்லிகா தம்பதிகளின் செல்வப்புதல்வன் மோகனப்பிரகாஸ் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (11-10-86) மல்லிகாபதியில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, சிவராசாமாமா, தேவிகா அத்தை (மல்லிகா சொப்பிங்சென்ரர்) அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், மாமாமார், காந்திஅன்ரி, புளியங்கூடல் ஐயாத்துரை அமாப்பா, காரைநகர் மாப்பாணவூரி, மகேஸ்வரி அப்பமமா மற்றும் உற்றார், உறவினர்கள் அனைவரும் சீரணி நாகம்மாளின் அருள் வேண்டி பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

''மல்லிகாபதி'',
மார்க்கட் கிழக்கு ஒழுங்கை,
(C 5128) மானிப்பாய்.

### மதில் வேலைக்கான கேள்விப் பத்திரம்

தெல்லிப்பழை கிழக்கு கட்டுப்பிட்டி சுடலையில் சுற்றுமதில் கட்டுவதற்கான கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் ரூபா 25/- கட்டி விண்ணப்பப்பத்திரங்களை 15-10-1986 தொடக்கம் 25-10-1986 வரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் முடிவுதிகதி: 31-10-1986. பூர்த்தியாக்கப்பட்டதும் சீல் வைக்கப்பட்டதுமான விண்ணப்பப்பத்திரங்கள் இணைச் செயலாளர், கட்டுப்பிட்டி சுடலை அபிவிருத்திச் சங்கம், துர்க்காபுரம், தெல்லிப்பழை என்ற விலாசமிடப்பட்டு துர்க்காதேவி தேவஸ்தானத்தில் வைக்கப்பட்ட தபாற்பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். மேலதிக விபரங்கள் தேவையாயின் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்;

தங்கம்மா
அப்பாக்குட்டி,
தலைவர்

நா. தவநாதன்,
வே. பாலசுப்பிரமணியம்.
இணைச் செயலாளர்கள்
(C 5119)

## WANTED

INSTRUCTOR IN FOUNDRY PRACTICE

Candidate should have a recognised diploma or equivalent qualification and minimum two years of practical experience in Foundry Industry Apply immediately to Director, Jaffna College Technical Institute, Vaddukoddai

Salary negotiable.

DIRECTOR

[A 1452]

## சர்வதேச பயங்கரவாதம்:

# ஐ. நா. அமெரிக்க - லிபியா தூதுவர்கள் கடும் விவாதம்!

நியூயோர்க், அக்-10

**சர்வதேச பயங்கரவாதம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்க, லிபிய தூதுவர்களுக்கிடையே நேற்றுக் கடும் விவாதம் இடம் பெற்றது. இவ்விவாதத்தில் இரு சாராரும் பரஸ்பரம் காரசார மான கருத்து, மற்றும் சொற்பிரயோகங்களை மேற்கொண்டனர்.**

ஐ நா வுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெனரல் வேர்ணன் வோல்டேர்ஸ், லிபியத் தூதுவர் அப்துல் சலாம் சிகுவா ஆகியோருக்கிடையிலேயே இந்த விவாதம் இடம்பெற்றது.

ஜெனரல் வோல்டேர்ஸ் தெரிவித்ததாவது:-

''லிபியா சர்வதேச பயங்கரவாதத்தின் சின்னமாக இருக்கின்றது. அத்துடன் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கான உதவிகளையும் விரிவான முறையில் வழங்கி வருகின்றது.

லிபியா வின் இந்த நடவடிக்கையினால் பல ஆபிரிக்க, ஐரோப்பிய, மற்றும் ஏனைய கண்டங்களைச் சேர்ந்த நாடுகள் அச்சத்திற்குள்ளாகியுள்ளன'' என்றார்.

லிபியத் தூதுவர் அப்துல் சலாம் இதற்குப் பதிலளித்துப் பேசியதாவது:-

''பயங்கரவாதம் தொடர்பாக அமெரிக்கா லிபியா மீது வீண் குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவருகின்றது. இக்குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவையாகும்.

லிபியா பயங்கரவாதத்தை ஆதரிக்கும் ஒரு நாடல்ல. சாதாரண மக்கள் பாதிக்கப் படுவதை லிபியா அனுமதிக்க வில்லை.

**உலகச் செய்திகள்**

விமானக் கடத்தல், குண்டு வெடிப்பு, ஆட்கடத்தல் போன்ற பயங்கரவாத நடவடிக்கைகளை லிபியா கண்டிக்கின்றது.

பயங்கரவாதத்திற்கு எதிராக அமெரிக்கா பேசுகிறது. ஆனால் அமெரிக்காவின் நடவடிக்கைகள் பயங்கரமாக உள்ளன.

தனது கொள்கைகளை ஏற்காத நாடுகள்மீது பொருளாதார, அரசியல் ரீதியாக அமெரிக்கா பயங்கரவாத நடவடிக்கைகளில் குதித்துள்ளது'' என்றார்.

## நிக்கரகுவாவினுள் சி.ஐ.ஏ. தீவிர ஊடுருவல்!

### அமெரிக்க விமானி தகவல்

மனகுவா, அக்-10

நிக்கரகுவாவினுள் அமெரிக்க மத்திய புலனாய்வுத்துறை நிறுவனம் (சி ஐ.ஏ.) தீவிர ஊடுருவல்களை மேற்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இரு தினங்களுக்கு முன்னர் அமெரிக்க விமானமொன்று நிக்கரகுவா அரச படைகளினால் சுட்டு வீழ்த்தப்பட்டது. தொடர்ந்து கைதான அவ் விமானத்தின் விமானி ஜூலியன் என்பவர் கொடுத்த தகவல்களிலேயே சி ஐ ஏ ஊடுருவல்கள்பற்றிய விபரம் வெளியாகியது.

நிக்கரகுவா அரசுக்கு எதிராக அயல் நாடுகளான ஹொண்டுயரஸ், எல்சல்வடோர் ஆகிய நாடுகளிலிருந்தே சி. ஐ ஏ. செயல்படுவதாக அவர் தெரிவித்தார்.

நிக்கரகுவாவிலுள்ள அரச எதிர்ப்புப் படையான 'கொன்ட்ரா' கிளர்ச்சிப் படைகளுக்கு ஆதரவாக ஹொண்டுயரஸில் 4 தளங்களும், எல்சல்வடோ

6-ம் பக்கம் பார்க்க)

## கங்கையில் பஸ் விபத்து 70 பயணிகள் பலி!

புதுடில்லி அக்-10

உத்தரப் பிரதேசத்தில் பஸ் வண்டியொன்று விபத்திற்குள்ளாகிச் கங்கை ஆற்றினுள் குடைசாய்ந்ததில் 70 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் இரு குழந்தைகளும், ஆறு பெண்களும் அடங்குவர்.

உத்தரப்பிரதேச அரச பஸ் வண்டியொன்றே நேற்றிரவு இவ்விபத்திற்குள்ளானது இவ் வண்டி கான்பூரிலிருந்து ரெய்பரேலிக்குச் சென்றுகொண்டிருந்தது

கங்கை ஆற்றின் மீதான பாலமொன்றின்மீது ஓடிக்கொண்டிருக்கையில் எதிரே வந்த டிரக்வண்டியொன்றுடன் மோதி அப்பஸ்வண்டி ஆற்றினுள் குடைசாய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

உத்தரப்பிரதேச அரசு மீட்பு வேலைகளைத் துரிதப்படுத்தியுள்ளது.

காயங்களுடன் உயிர் காப்பாற்றப்பட்டோர் அருகிலுள்ள வைத்தியசாலையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## எரியூட்டும்குண்டிலிருந்துபாதுகாப்பு: 'நேபாம்' வகை எரியூட்டும் குண்டு

இவ்வகைக் குண்டுகள் திரவ அல்லது பாகுத் தன்மை கொண்ட எரிபொருளைக் கொண்டிருப்பதால், குறுகிய நேரத்தில் கூடிய நிலப்பரப்பைத் தீப்பற்றச் செய்யக் கூடியவையாய் உள்ளன. எனவே மக்கள் நெருக்கமாக காணப்படும் இடங்களில் இவ்வகைக் குண்டுகள் போடப்படின் பெருமளவு உயிர்ச்சேதங்களை ஏற்படுத்துவதோடு நீண்ட நேரத்திற்கு தொடர்ச்சியாக எரிந்து கொண்டேயிருக்கும். இவ் வகைக் குண்டுகளைப் பாவித்தல் சர்வதேச அரங்கில் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது இருப்பினும் பல போராட்டங்களின்போது இவைபயன் படுத்தப்பட்டே வந்துள்ளன. முக்கியமாக அமெரிக்கர்களினாலேயே இவ்வகைக் குண்டுகள் உலகில் அதிகளவு பயன் படுத்தப்பட்டுள்ளன வியட்நாமிய போராட்டத்தின் போது, வியட்கொங் கெரிலாக்களை அழிப்பதாகக் கூறிக்கொண்டு வீசப்பட்ட நேபாம் குண்டுகளின் மூழு நிறை 400 000 தொன்னாகக் காணப் படுகிறது இதே அமெரிக்காவினது ஆலோசனையாலும், இஸ்ரேலின் வழிநடத்தலினாலும் சிறீலங்காவும் தமிழ்மக்களின்மீது இவ்வகைத் தாக்குதல்களை ஆரம்பித்துவிட்டது.

நேபாம்வகை எரியூட்டும் குண்டுகள் பொதுவாக உயர் சக்திவெடிமருந்தைக்கொண்ட குண்டுகளுடனோ அல்லது ஏனையவகை எரியூட்டும்குண்டுகளுடனோ ஒப்பிடும் போது அளவில் பெரியவையாகவே காணப்படுகின்றன. அமெரிக்கத் தயாரிப்பான நேபாம் குண்டானது 750 இருத்தல் நிறையுடையதாகவும், 416 லீற்றர் திரவ எரிபொருளைக் கொண்டுள்ளதாகவும் காணப் படுகிறது இவ்வகை குண்டுகள் ஆரம்பகாலத்தில் தயாரிக்கப்பட்ட போது பாகுநிலையிலான எரிபொருளைக் கொண்டே தயாரிக்கப்பட்டன ஆனால் இப்போது நேபாம்-B எனப் பெயரிடப்பட்டு தயாரிக்கப்படுபவை திரவ எரிபொருளையே கொண்டுள்ளன இவை பொதுவாக 850 oC வெப்ப நிலையைக் கொடுக்கக் கூடியனவாகவும், முன்னைய தயாரிப்புகளைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு நேரத்திற்கு தொடர்ச்சியாக எரியக் கூடியனவாகவும் உள்ளன.

உங்கள் உடைகளின் மீது எரியும் இத்திரவம்பட்டு விடுமாயின வெறுங்கைகளினால் அகற்றமுயற்சிக்காதீர். அது உங்கள் கைகளையும் தீப்பற்றச் செய்துவிடும். உடைகளை உடனடியாக அகற்றமுடியுமானால் அகற்றிவிடுங்கள் உடைகளினூடுருவியோ அல்லது நேரடியாகவோ உங்கள் உடலின் மீதும் இத்திரவம் தெறித்து எரிந்து கொண்டிருக்குமாயின் எரியும் வெண்பொசுப்பரசுத் தூள்களை அகற்றுவதற்குச் செய்யப்பட்ட வழிமுறைகளையே இதற்கு கையாளுங்கள். நேபாம் குண்டுகளால் ஆழமான தீக்காயங்கள் பரவலாக ஏற்படுவதற்கு சாத்தியமுண்டாதலால் இயலுமான அளவு விரைவில் ஏனைய எரியூட்டும் குண்டுகளுக்குரிய முதலுதவி சிகிச்சை முறைகளையே இதற்கும் மேற்கொள்ளுங்கள் இவ்வகைக் குண்டு வெடிப்பதனால் ஏற்படும் வெப்பமும், நச்சு வாயுக்களும் உங்கள் நுரையீரலைக்கூட பாதிப்படையச் செய்து விடக்கூடியனவாதலால் நேபாம் தீயினால் ஏற்பட்ட புகைமூட்டங்களினூடு செல்வதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

மேலே குறிப்பிட்ட வகை எரியூட்டும் குண்டுகளைத் தவிர

[6ம் பக்கம் பார்க்க]

எம் டீ சோப் வழங்கும் தீபாவளி அதிர்ஷ்டம்

10 நைலெக்ஸ் சேலைகளைப் பரிசாகப் பெறுங்கள்!

பங்குபற்றும் முறை

உங்கள் முழுப்பெயர், விலாசம், வயது ஆகியவற்றுடன் உங்களது அல்லது உங்கள் பெற்றோர், அல்லது பாதுகாவலரின் அடையாள அட்டை இலக்கத்தையும் ஓர் 6 x 3 அங்குல அளவு வெள்ளைக் கடதாசியின் ஒரு பக்கத்திலும் நீங்கள் சவர்க்காரம் வாங்கிய கடையின் பெயர், விலாசம் ஆகியவற்றை மறுபக்கத்திலும் எழுதி அத்துடன்

5 எம் டீ சோப் மேலுறைகளையோ அல்லது 5 எம் டீ நீலசோப் மேலுறைகளையோ அல்லது ஒரு 'எம் டீ பார் சோப்' மேலுறை அல்லது இரண்டு எம் டீ அரைபார் சோப் மேலுறைகளை சேர்த்து அனுப்பவேண்டும்

ஒருவர் எத்தனை விண்ணப்பங்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

★ ஒவ்வொரு பரிசைப் பெறுபவரும் சவர்க்காரம் வாங்கிய கடைக்கு ரூபா 50/- பெறுமதியான பொருட்கள் இனும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:

எம் டீ என்ரபிறைஸ், தொழிற்பேட்டை, அச்சுவேலி.

★ 28-10-86 பிற்பகல் 5-00 மணிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எம் டீ சோப்




விலை ரூபா 2/- மட்டுமே.




தரமான உள்ளூர் உற்பத்திகளை ஆதரியுங்கள்!

[A 745]

### மணிவாக்கு

அடைமழை நாளில் ஓயாமல் ஒழுகுவதும், சண்டைக்காரியான மனைவியும் ஒன்றுபோல.

—பைபிள்

# நமது நோக்கு

## மனித வர்க்கத்திற்கு மீட்சி உண்டா?

நம்பிக்கை கொண்டவர்கள் தங்களைக் குறைத்து மதிப்பிடமாட்டார்கள். மலைச்சுமை தலைச்சுமையாக மாறுவதற்கு வெற்றி கிடைக்குமென்ற நினைவு நிலைத்திருக்கவேண்டும்.

அதனால்தான் "அச்சம் துளியுமில்லாத மனமும் நேரே நிமிர்ந்த தலையும், தெளிந்த ஞானமும் கொண்டு, சிறுசிறு துண்டுகளாகச் சிதறாத உலகத்தில் உயிரற்ற வழக்கம் என்ற பாலைவனத்தில் அறிவென்னும் தெளிந்த நீரோடை பாயாது திக்குத் தப்பாத வழியில் செல்லுவதுதான் சுதந்திரத்துக்கு இட்டுச்செல்லும் சீரிய பாதை" என்று உலக மகாகவி தாகூர் தமது கீதாஞ்சலியில் பாடினார்.

இன்றைய உலகுக்கு இது ஒரு சிறந்த பாட்டலல; கேலிச்சித்திரம்போல் தோன்றும். வீட்டிலும் நாட்டிலும், அகில உலகிலும் போராயுதங்கள் தெய்வம்போல் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற மலிந்து கிடக்கின்றன.

இன்றைய குழந்தையின் வெள்ளை உள்ளத்தை துப்பாக்கி கவருவதானல்; ஆயுதப்போரே புருஷலட்சணம் என்பது லட்சியமாக உயர்கின்றது.

உலகின் தலைவிதி எவ்வாறிருக்கும்? உய்யும் வகைக்கு வழி என்ன? மண்ணிலும் விண்ணிலும் பல தரபபட்ட ஏவுகணைகள் அலைமோதுகின்றன. போர் எங்கே தொடங்கும்? எவ்வளவு காலம் நடைபெறும்? எங்கு எவ்வாறு முடிவடையும்?

இவற்றை இதய சுத்தியுடன் ஆராயவேண்டிய பொறுப்பு இன்று கூடும் இரு உலகத் தலைவர்களுக்கு உண்டு. இன்றைய போர் நிலையங்களைப் பேணுவதற்கு ஒரு நிமிடம் செலவாகும் பணம் பத்து லட்சம் அமெரிக்கடொலர். இது ஏழை நாடுகளுக்கு நிவாரணமளிக்க போதியதாகும்.

இந்த உபதேசம் ரீகனும் கொர்ப்பச்சேவும் கேள்விப்படாததல்ல. போரின் புருவமுனையில் நிற்கும் இவ்விரு தலைவர்களும் விளிம்பின் ஆபத்தை உணர்கின்றனர்!

ஆசாரி விட்டாலும் பூசாரி விடமாட்டான் என்ற வாசகத்துக்கமைய, இவர்களின் பின்னணியில் நின்று கயிறிழுக்கும் ராணுவநிபுண ஆலோசகர்கள் நாட்டின் பெருமை முதல் என்றும், உலக பாதுகாப்பு இரண்டாவதென்றும் பொருள்படும்படி பேசுகின்றனர். "இன்றைய சந்திப்பு வருகிற உச்சிமாநாட்டுக்கொரு ஒத்திகை. அவ்வளவுதான்" என்று வெள்ளைமாளிகை ஓலமிடுகிறது. சோவியத்ஆட்சிக்குப் பயந்துகாட்டினல் பிறகு என்ன அமெரிக்கமேன்மை?

யாரியாரை ஏமாற்றுகிறுரென்ற அவநம்பிக்கை இந்த உயர்ந்த உலகஸ்தானம் தொடக்கம் உலகில் உள்ள ஏனைய பிணக்குகள், போர்கள் அனைத்திலும் நிலவுகிறது.

எனவே சமாதானம், படைக்குறைப்பு, அணுஆயுதப் பரீட்சை நிறுத்தம், அணுஆயுதப்போர் ஒழிப்பு என்று ஆரவாரமிடப்படும் போதும் இவற்றிற்கெதிரான சவால்கள், சண்டைகள் தொடர்வது இன்றைய உலகின் இயற்கையாய்விட்டது.

ஈரான்-ஈராக் யுத்தத்தின் ஆறுவருட அழிவுகள் அந்த நாடுகளுக்கோ, அங்கு சமாதானம் கொண்டுவர முயற்சித்த கூட்டு நாடுகளுக்கோ படிப்பினையாகவில்லை.

யார் கெட்டாலும் நாம் வெற்றிகாண வேண்டுமென்ற அகங்காரம், இந்த அணுக்குண்டு யுகத்தில் எதனைச் சாதிக்கும்?

அமெரிக்க ஜனதிபதி ரீகனும் சோவியத் தலைவர் கோர்பச்சேவும் இந்த நிலைமையை நன்குணர்ந்தமையால் தாமாகவே ஒருவரை ஒருவர் சந்திக்க முற்பட்டிருக்கின்றனர்.

குடிபோன இந்தப் போலிக் கௌரவப் போக்கைக் கைவிட்டு நானூறு கோடி மக்கள் மட்டுமலல; அவர்களைப் பொறுமையுடன் பேணி வளமளிக்கும் பூமாதேவியையும் பாதுகாக்கும் பொறுப்புத் தம்கள் கையில் இருப்பதை இன்றைய சந்திப்பில் இவ்விருவரும் இதயபூர்வமா உணரவேண்டும். உலக அழிவை எதிர்பார்க்கும் சோதிடம் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போய்விடும்.

கம்யூனிஸ்ட் சீன முதலாளித்துவ நாடுகளுடன் அளவளாவுகின்றது; சோவியத் ரஷ்யா இஸ்ரேலுடன் பேச விழைகின்றது; கான்ஸவேட்டிவ் தாட்சரின் கூட்டாளி வெளிநாட்டமைச்சர் ஹவ் (Howe இலங்கைத் தமிழருக்காக ஐ நா. வில் குரல் கொடுக்கிருர்; அமெரிக்க மக்கள் தென்னுபிரிக்கக் கறுப்பருக்கு ஆதரவளிக்கின்றனர்; நாம் கற்பனை செய்யாத அளவிற்குப் பருந்தும் கிளியும் ஒரு கூட்டில் வாழ வழிபிறக்கும்.

இவ்வித தெருள்நோக்கு எந்த நிலையிலும் மக்களினதோ அல்லது தலைவர்களினதோ மனத்தைவிட்டகலாதவாறு ஒளியூட்டவல்ல தெய்வமே நாம இன்று பூஜைசெய்யும் அறிவுத்தெய்வம்.

சாதி மத மொழி இன பேதங்களுக்கப்பாற்பட்டு, ஒரு நாமம், ஒரு உருவமில்லாத அந்தச் சக்திக்கு நாம் ஆயிரம் நாமம் இட்ட போதும் அதன் அருள் மனித வர்க்கம் மட்டுமல்ல; உயிரினம் அனைத்தையும் பாதுகாக்கவல்லது.

எனவே இவ்விருவரின் இன்றையசந்திப்பு உலக அமைதிக்கு வழிகோலவேண்டுமென்றும் வாணியை வணங்குவோம்.

# விஷ்ணு ஆலயத்தில் சனி பகவான் வழிபாடு

பிரம்மஸ்ரீ வி. வேங்கடசுப்பிரமணியக்குருக்கள்
[வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜ பெருமாள் தேவஸ்தானம்]

ஒருமனிதனுக்கு துன்பங்கள் வந்தபோதும் திருமணம், பிறந்தநாள், வருடப்பிறப்பு முதலியசந்தர்ப்பத்திலும் நவக்கிரகவழிபாடு பொதுவாகவும் தோஷமான கிரகத்தின் வழிபாடு விசேடமாகவும் செய்ய வேண்டும் இப்படியான சந்தர்ப்பங்களில் இக்காலத்தில் அனேகமாக சனிக்கிரகம்-செவ்வாய்க்கிரகம், ராகு கேதுக்கள் ஆகிய கிரகவழிபாடுகள் எம்மத்தியில் விசேடமாகச் செய்யப்படுகின்றன. இவற்றுள் சனிபகவானை வழிபடுவதற்கு விஷ்ணு ஆலயங்கள் விசேட சிறப்புடையதாய்வழக்கத்திலிருக்கின்றன. சனிவழிபாட்டுடன் விஷ்ணுவழிபாடும் சேர்த்துச்செய்வது சிறப்புடையதாகும். மந்திருபமாக விஷ்ணு வழிபாட்டை-விஷ்ணு சாந்நியத்தை செய்யும் நியாச பூசையில் நாராயணனின் திருமேனியில் எல்லாக் கிரகங்களும் அமைந்திருப்பதாகவும் பூசிக்கும் வழக்கம் இருக்கின்றது. இதன் அடிப்படையில் பார்த்தால் சனிபகவானை வழிபடுவதோடு செய்யப்படும் விஷ்ணுவழிபாடு எல்லாக்கிரகத்தின் அருளையும் பெற உதவும் என்பதுதெளிவாகும். இதுமட்டுமன்றி வைணவசமய அடிப்படையில் நாராயணனை வழிபடுவதும் தியானிப்பதுமே எல்லாவிதமான தோஷங்களையும் போக்கி சகல சௌபாக்கியங்களையும் கிடைக்கச் செய்யும் என்னும் கருத்துமுண்டு.

### ஒரேநாளில்

இவ்வருடம் புரட்டாதிக் கடைசிச்சனிக்கிழமையும் மகா நவமியாகிய நவராத்திரி 9ம் நாளும் ஒரே நாளில் பொருந்தி வருகின்றன. நவராத்திரிக்கு முதன்மைகொடுப்போர் சனிக்கிழமை விரதமனுஷ்டிக்கலாகாது என்பதால் சனீஸ்வர வழிபாடு செய்தல் எள்ளெண்ணெய்த்தீபம் எரித்தல் என்பதுவும் தவறு என்று கருதுவது தவறான கொள்கையாகும். நவராத்திரி விரதம்இருப்போர் அவ்விரதத்துடன் சேர்ந்து சனிக்கிழமை விரதமும் அனுட்டிக்கலாது என்பது பொருத்தமேயாயினும் சனீஸ்வர வழிபாடும் செய்யலாகாது எனக் கருதுவது தவறாகும். கிழமை தோறுமோ அன்றி புரட்டாதிச் சனிக்கிழமைகளிலோ விசேடமாகச் செய்யும் சனீஸ்வர வழிபாட்டை நிறைவேற்றிய பின் இவில் நவராத்திரி வழிபாடு செய்வதுதான் உத்தமமாகும்.

இந்த ஆண்டு புரட்டாதிக் கடைசிச்சனிக்கிழமையும் வண்ணை ஸ்ரீ வெங்கடேசர் ரதோற்சவமும் இணைந்து வருவதால் இவ்வாலயத்தில் புரட்டாதிச் சனிக்கிழமை வழிபாட்டைச் செய்வது அதிக நன்மை பயப்பது மட்டுமன்றி அடியார்களுக்கு அதிக வசதியாகவும் அமைந்து விட்டது. இரண்டு சிறப்புக்களை ஒரே சமயத்தில் அநுபவிக்கும் வகையில் பெருமாள் அடியார்கள் இப்புண்ணிய தினத்தை பெற்றிருக்கிருர்கள். இந்த ஒற்றுமையை ஏற்படுத்திய பெருமாள் எல்லோர்க்கும் எல்லா நலன்களையும் அருள்வார் என நம்பிப்பிரார்த்திப்போம்.

## நடை பாதை வியாபாரிகளின் மும்முரம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் பஸ் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளில் நடைபாதை வியாபாரிகள் தற்காலிகமாக 'கூடாரங்களை' அமைத்துக் கொள்வதில் மும்மரமாக ஈடுபட்டுள்ளனர்.

முன்னர் இருந்து வந்த நடைபாதை கடைகளை விட மேலதிக கடைகள் அமைக்கப் படுகின்றன.

தீபாவளித் திருநாள், தொடர்ந்து நத்தார், புது வருடப்பிறப்பு என்பன வருவதால் இப்போதிருந்தே நடைபாதைக்கடைகளை அமைப்பதில் இவ் வியாபாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

நடைபாதை வியாபாரிகளின் கடைகளும், மறுபுறம் மினிபஸ்கள் நிறுத்தப்பட்டிருப்பதும் வீதிகளில் மக்கள் போக்குவரத்துச் செய்வதற்கு மிகவும் இடையூறுக இக்கிறது என மக்கள் பேசிக் கொள்வதையும் அவதானிக்க முடிகிறது. (ச)

## ஜெயந்தி நகரில் நூலகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் நூலக சேவை ஸ்தம்பிதமடைந்ததை தொடர்ந்து ஜெயந்தி நகரின் ரோட்டறிக்கழக பிரமுகரும் சமூகசேவையாளருமான ஆசிரியர் எட்வேட் மரியதாசின் முயற்சியால் பொதுநூலகம் ஒன்று எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்து மாமன்ற ஆதரவில் நடைபெறும் இவ்வைபவத்திற்கு விஞ்ஞானக்கல்வி நிலைய அதிபர் திரு கனகசிங்கம் தலைமை தாங்குவார். உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் கா. நாகலிங்கம் தம்பதிகள் பிரதம விருந்தினராக கலந்து கொள்கின்றனர் விழாவில் இந்து நூல்வெளியீடும் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

அன்றைய தினம் இந்து மாமன்றத்தால் நடத்தப்பட்ட சமயபாடபரீட்சையில் சித்தியடைந்தோருக்கான பரிசளிப்பு வைபவமும் விஞ்ஞானக் கல்வி நிலையத்தல் நடைபெறும். இவ்வைபவத்திற்கு அதிபர் திரு. கனகசிங்கம் தலைமை தாங்குவார்.

## ஏடு தொடக்கும் வைபவம்

யாழ்ப்பாணம், சனி

நாளை ஞாயிற்றுக்கிழமை விஜயதசமி தினத்தன்று பகல் 12 மணிக்கு கூழாவடிப் புக்கை திண்ணிப் பிள்ளையார் கோவிலில் ஏடு தொடக்கும் வைபவம் நடைபெறும். [ஔ]

## வாணீயே! கலைகளின் தாய்நீயே!!

ராகம்: கல்யாணி தாளம்: ஆதி

பல்லவி

வாணீயே வரம்தரு வாய்நீயே - கலை
வாணீயே கலைகளின் தாய்நீயே!

[வாணீ...]

அனுபல்லவி

நாமேலே நிலைப்பவள் நீதானே வெள்ளைப்
பூமேலே இருப்பவள் நீதானே!

[வாணீ...]

சரணம்

அறிவும்நீ அறிவுக்கு வடிவும்நீ - பேர்
அழகும் நீ அழகிற்கு அளவும்நீ நல்
இசையும் நீ இசையது நிறைவும்நீ மெல்
அன்பும்நீ அன்பதுஉருவும் நீ!

[வாணீ...]

அணியும் நீ அணியதன் அணியும்நீ நவ
மணியும் நீ மணியதன் ஒளியும்நீ தண்
பொழிலும் நீ பொழிலதன் எழிலும் நீ பேசும்
மொழியும் நீ மொழியதன் விழியும்நீ]!

[வாணீ...]

- முருகு

## சக்தியின் பெருமை

### சௌந்தர்யலகரி

நீண்டுவாய் நெகிழ்ந்த நீலமே நிகரும்
நின்கடைக் கண்ணருட் பொழிவாம்
மாண்டதோர் மழையால் மஞ்சனம் புரிக
சேயராம் வறிஞரே மையும் நீ
ஈண்டிதால் உயர்வாழ் வெய்துவோம் உனக்கும்
எய்திடா தொருகுறை இறைவீ
காண்டகு மனைக்கும் கானுக்கும் நிலவைக்
காலுமே மதிஉண்டோ குறையே

பொருள்: நீண்டுவிரிந்த நீலோற்பல மலரை ஒத்த உனது கடைக்கண் பொழியும மாட்சிமை மிகுந்த ஒப்பற்ற அருள் மழையால் அன்னையே நீ உனது குழந்தைகளான அருட் செல்வம் பெற்ற ஏழைகளாகிய எம்மையும் நீராட்டுவாயாக. இம்மையிலேயே உன் கருணை வெள்ளத்தில் நீராடுவதால நாம் பேரின்பப்பெருவாழ்வு பெறுவோம். தாயே அதனல் உனக்கும் ஒரு குறைவும் வராது இறைவீ காட்சிக்கு இனிய வீட்டுககும் காட்டுக்கும சந்திரன் நிலவைப் பொழிகின்றதே. அதனல் மதிக்கு ஏதுங் குறைவுண்டா? இல்லையே. அதுபோல் எமக்கு அருள் புரிவதால் உனக்குக் குறையில்லை. நீ எமக்கு அருள் புரிவாயாக என்பது குறிப்பு

தமிழில்: பண்டிதர் ச. சுப்பிரமணியம்
பொருள்: மட்டுவில் ஆ. நடராசா

## தேவை

சமையல் வேலை நன்கு தெரிந்த, வீட்டு வேலைகளையும், பிள்ளைகளையும் பராமரிக்கக் கூடிய, நேர்மையுள்ள 30 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை:- விபரங்கட்கு C/o ஈழநாடு யாழ்ப்பாணம். விளம்பர இல. 5156 [C-5156]

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Honda C. G 125, உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- 38, பாரதி வீதி, சச்சேரியடி, யாழ்ப்பாணம் [C-5154]

## வகுப்புகள்

Zoology:- Embryology [முளையவியல்] 87ம் ஆண்டுக்குரியது. ஆரம்பம் [ஞாயிறு] 7-30 a.m ஆசிரியர் R Easan B. Sc [Cey] Bond Institution Jaffna [C-5152]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**பொன்னுத்துரை ஜோர்ச் இராஜசேகரம்**

தோற்றம்: 30-03-1923
மறைவு: 11-09-1986

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே, மரணத்திலும் என்னை மறவாதீர்கள்' இவரின் ஆன்மா சாந்திக்காக 11-10-86 சனிக்கிழமை மாலை 4-00 மணிக்கு கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தில் துக்கப் பாடல்பூசை ஒப்புக் கொடுக்கப்படும் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய். C 5161

## இன்றைய பலன்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)
படும். தொழில் துறையில் கண்டுடைப்பு வேலைகள் நடைபெறும்.

கும்பம்: காதல் விவகாரம் தலைதூக்கும். அன்னியவாசமும் அறுசுவை போசனமு முண்டாம் நீண்டநாள் தொழில் விவகாரம் நல்லமுடிவைத்தரும்.

மீனம்: வார்த்தைகள் மூலம் காரியத்தில் தடைகள் பல உருவாகும் கருடப் பார்வை வட்டமிடும் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடாதிருக்கவும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## யாழ்.கோட்டை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வில் கோட்டை இராணுவத்தினர் மீது புளட்போராளிகள் பீரங்கித்தாக்குதலை யாழ். நூலக மைதானத்திலிருந்து நடாத்தினர்.

நேற்று இராணுவத்தின் 38வது ஆண்டு விழா கொண்டாட்டங்கள் யாழ் கோட்டை இராணுவ முகாமில் நடைபெற்றசமயமே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனால் விழாநிகழ்ச்சிகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

இதன்பின்பு மாலை 3 மணி வரை அமைதிநிலவியது ஆயினும் மாலை 3-30மணியளவில் கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல் மீண்டும் நடந்து கொண்டிருந்த சமயம் கோட்டை இராணுவத்தினர் கால்நடையாக சுப்பிரமணியம் பூங்காவிற்குள்ளாலும் நூல்நிலைய வீதியாலும் போராளிகளின் சென்றிகளை சுற்றிவளைக்கும் நோக்குடன் வந்துகொண்டிருந்தனராம் இதனை சென்றியில் இருந்த புளட்' போராளிகள் கண்டு அவர்கள்மீது துப்பாக்கிப்பிரயோகங்களைச் செய்ததுடன் நிலக்கண்ணிவெடிகளையும் வெடிக்கவைத்தனர்.

நிலக்கண்ணிவெடிவெடிக்கத் தொடங்கியது. இராணுவத்தினர்பின்வாங்கி கோட்டையை நோக்கிச் சென்றுவிட்டனர். சுப்பிரமணியம் பூங்காவிற்குள்ளாலும் நூல்நிலைய வீதியாலும் புளட் போராளிகள் இராணுவத்தினரை நேருக்கு நேர் துப்பாக்கிச்சமரில் சந்தித்துக் கொண்டனராயினும் போராளிகள் தரப்பில் எதுவித சேதமும்இல்லை. ஆயினும் இராணுவத்தினரின் சேத விபரமும் எதுவும் தெரியவில்லை, கோட்டைக்குச் சென்ற இராணுவம் அங்கிருந்து மாலை வரை தொடர்ந்து ஷெல் தாக்குதலை மேற்கொண்டது இதனால் யாழ் கொட்டடி முத்தமிழ் வீதியைச்சேர்ந்த எஸ் தங்கராசா வயது 54), எஸ் இராசன் (வயது 40 எஸ் பொன்னுத்துரை (வயது 32) ஆகிய மூவரும் காயமுற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமாலை நடைபெற்ற இத்தாக்குதல் சம்பவங்களின் போது யாழ் நகரில் நின்றிருந்த மக்கள் கிடைத்தவாகனங்களில் ஏறிக்கொண்டனர். வாகனங்கள் யாவும் பலாலி வீதிக்கும், வின்சர் தியேட்டர் சந்திக்கும் வந்து விட்டன நகரத்தின் கடைகள்யாவும் உடனடியாக மூடப்பட்டன மாலை 6 மணிக்கு நகரத்தில் மக்கள் நடமாட்டம் காணப்படவில்லை. [ச-சே]

## வட்டு கலா நிலைய நவராத்திரி விழா

யாழ்ப்பாணம் சனி,

வெற்றிவிழாக்காணும் வட்டுக்கோட்டை கலா நிலைய நவராத்திரி விழா இலங்கைக் கல்விச் சேவை முன்னாள் அதிபர் திரு க. கயிலாயநாதன் தலைமையில் இன்று நடைபெறும்.

வடமாநிலக் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. கா சந்திரராசாவும் திருமதி சந்திரராசாவும் விழாவின் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்கள்.

விழாவில் இசையரங்கு, வழக்காடு மன்றம் பரதநாட்டியம் என்பன போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் [ச]


**எமது இன்றைய வெளியீடு**

எங்கள் தாய்க்குலமே வருக
சுரேஸ், ஜீவிதா கவுண்டமணி
R. V. V. [OR]

**சயந்தா வீடியோ சென்ரர்**
கே. கே. எஸ். வீதி,
கோண்டாவில்.
(C 5160)

**நியூ விக்ரேஸ்**
**புதிய வீடியோ பட வெளியீடு**
★ தொடரும் உறவுகள்
(தரமான பிரதி)
கார்த்திக், ஊர்வசி, விஜயகுமார், சில்க்

**நியூ விக்ரேஸ்**
**எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்**
தொலைபேசி: 23532.
(A 1396)

**மிது வீடியோ மூவீசாரின்**
**இன்றைய வெளியீடுகள்**

.1 கிருஷ்ணு, ஸ்ரீதேவி, சிலோன் மனோகர்
(நடித்த)
★ புயல் ★
(தரமானபிரதி)

2. ஆபிரிக்கா வாழ் மிருகங்களை வைத்து தயாரிக்கப்பட்ட கதையம்சத்துடன் கூடிய தமிழ் திரைப்படம்

★ எங்களையும் வாழவிடுங்கள் ★
(தரமானபிரதி)

**மிது வீடியோ மூவீஸ்**
பிரதான வீதி, சித்தன்கேணி.
[A 1454]




## புனிதமண்

யாழ் நகரிலுள்ள வியாபார ஸ்தாபனங்களின் பெயர்ப்பலகைகளை அடிக்கடி கவனித்துப்பார்த்தால் தொண்ணூறு வீதமான பெயர்ப்பலகைகள் ஆங்கிலத்திலேயே இருக்கின்றன.

தமிழ் ஆராய்ச்சி வேர் விட்ட எமது மண்ணில் உத்தியோக மொழி அந்தஸ்து தமிழிற்கு இல்லை. வியாபாரப் பெருமக்கள் மனம் வைக்க வேண்டும்.

- பாணபத்திரன்

## திருமலை மாவட்டத்தில்——

[1-ம் பக்கத் தொடர்ச்சி]
இச் செய்தியை திரு. அமிர்தலிங்கம் சென்னையில் வெளியிட்டுள்ளார்.

திருமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு நிலாவெளி சித்தூர் இலுப்பைக்குளம், சல்லி மற்றும் சூழலிலுள்ள கிராமங்கள் மீது இராணுவத்தினர் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் தொடர்ச்சியான தாக்குதல்களை மேற்கொண்டுவருவதாகவும், இதன்காரணமாக பல பொது மக்கள் கொலை செய்யப்பட்டும், பலவீடுகள் கோவில்கள், சேதப்படுத்தப்பட்டதாகவும் திரு அமிர்தலிங்கம் பிரதமர் ராஜீவ் காந்திக்கு மகஜர் ஒன்றின் மூலம் தெரிவித்து, இப்படு கொலைகளை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார்.

மேலும் இது தொடர்பாக திரு. அமிர்தலிங்கம் சென்னையிலிருந்து தொலைபேசி மூலம் கொள்கைத் திட்டமிடல் சமிட்டித் தலைவர் ஜி பார்த்தசாரதி, வெளிவிவகார அமைச்சர் சிவ்சங்கர், மத்திய சீர்திருத்த இணை அமைச்சர் பி சிவசிதம்பரம், வெளியுறவுச் செயலாளர் ஏ பி வெங்கடேஸ்வரன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு உடன் நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் வலியுறுத்திக் கூறினர்.

இந்திய அரசாங்கம், இலங்கை அரசாங்கத்துடன் உடன் தொடர்பு கொண்டு அப்பாவித்தமிழர், கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக திருமலை மாவட்டத்தில் கொலை செய்யப்படுவதையும், அவர்கள் திட்டமிட்டு தமது பாரம்பரிய பிரதேசங்களிலிருந்து துரத்தப்படுவதையும் உடன் நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்க வேண்டுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கையுடனான தற்போதைய சமாதானப் பேச்சுவார்த்தை இந்திய அரசின் நல்லெண்ண முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இவ்வாறான இராணுவ நடவடிக்கைகளை இலங்கை அரசு தொடர்ந்து மேற்கொள்ளுமாயின் இந்தியாவின் முயற்சி வீணடிக்கப்பட்டுவிடுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

கூட்டணிச் செயலாளர்நாயகம் தனது தொலைபேசித் தொடர்புடன் டெலக்ஸ் மூலமும் விரிவான செய்தியை இந்திய அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ளார்;

திருமலை மாவட்டத்திலிருந்து தமிழ் மக்கள் திட்டமிட்டுத் துரத்தப்படுவதாகவும் இது இலங்கை அரசினதும்ஆயுதப் படையினரது திட்டமிட்ட செயலெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்· [கே]

## உயிரைக்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இதேவேளை யாழ். கோட்டை இராணுவமுகாமிலிருந்து பல தடவைகள் 'ஷெல்' தாக்குதல்கள் மிக மும்முரமாக மேற்கொள்ளப்பட்டது.

எச்சர்ந்தர்ப்பத்திலும் இராணுவம் முகாமைவிட்டு வெளியேறலாம் என்ற நோக்கில் போராளிகள் நவீன ஆயுதங்கள் சகிதம் யாழ் நகரில் உஷாரடைந்தனர்

நேற்று மாலை முதல் இச்செய்தி அச்சுக்குபோகும்வரை துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், 'ஷெல்' தாக்குதல் சத்தங்களும், 'ஷெல்' விழுதை முன் கூட்டியே அறிவிக்கும் அபாயசங்கின் ஒலிகளும் கேட்டவண்ணம் இருந்தது. (ச-எ)

## விஜயதசமி விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ். வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நாளை விஜயதசமிவிழா சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது.

அன்றைய தினம்புதியமாணவர்களுக்கு ஏடு தொடக்கும் வைபவமும், வித்தியாலய நூலகத்திற்கு நூல்களை அன்பளிப்புச்செய்த திருவாளர்கள் து சீனிவாசகம், சி. இராசதுரை, எல் பக்கிரிசாமி விசாகப்பெருமாள் ஆகியோர் பாராட்டப்பட்டு கௌரவிக்கப்படுவார்கள் சொற்பொழிவுகளும், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. [வா]


**வெலிங்டன்**
10-30, 2-30, 4-30, 6-30
பயங்கர சண்டை காட்சிகள் நிறைந்த
**Space Hunter**
(Adults only)
Sex-Action-Thrill

**லிடோ**
தினசரி காலை 10-30,
மாலை 2-30, 6-30
பிரபு – நளினி
நடித்த
3-வது வெற்றி வாரம்
புதிய வெளியீடு
கலர்
**நியாயம்**


## கொள்ளை

வட்டுக்கோட்டை, வெள்ளி

வட்டுக்கோட்டையிலுள்ள ஜெகநாதன் என்பவரது வீட்டில் பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

விடுதலை இயக்கங்களின் உதவியுடன் கொள்ளைபோன பொருட்களின் ஒரு பகுதி மீட்கப்பட்டதாயினும் முழுப் பொருட்களையும் மீளப்பெற முடியவில்லை.

## இனப்பிரச்னை..

[ ம் பக்கத்தொடர்ச்சி]
திரு ராஜீவ் காந்தியை இன்று காலை புதுடில்லியில் சந்தித்துப் பேசினர்.

இப் பேச்சுக்களின்போது இலங்கை இனப்பிரச்னையின் தற்போதைய நிலை குறித்தும் இருவரும் கருத்துப் பரிமாறிக் கொண்டதாக அறியப்படுகிறது ஆனால் இச் சந்திப்புகளின் விபரமெதுவும் வெளியிடப்படவில்லை. (எ)

## சமாதானசபை விசாரணை:

# மனைவிக்கு ரூ. 34,000 நஷ்டஈடு வழங்க தீர்ப்பு

உடுவில், வெள்ளி விவாகரத்து கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைசெய்த இணுவில் சமாதானசபையினர் மனைவிக்கு 34 000 ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் சட்டபூர்வமான விவாகரத்து செய்ய ஏற்பாடு செய்யுமாறும் தீர்ப்பளித்தனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான ஒரு இளைஞனும் ஒரு யுவதியும் சிங்கப்பூரில் சந்தித்தபொழுது ஒருவரை ஒருவர் விரும்பினரெனவும் பின்னர் அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் வந்தபின்சட்ட பூர்வமாகத் திருமணம் செய்தார்களென்றும், பின்னர் ஏற்பட்ட குடும்பத் தகராறினால் கணவன் பிரிந்து வேறு ஓர் பெண்ணை திருமணம் செய்தாரென்றும் விசாரணையில் தெரியவந்தது

இணுவில் சமாதான சபையினர் திரு. தி. ச சண்முகலிங்கம் தலைமையில் இப் பிரச்சினையினை விளங்கித் தீர்ப்பு வழங்கினர்.

இளைஞனின் முதல் மனைவி செய்து காண்ட முறைப்பாட்டை விசாரணை செய்த சமாதான சபையினர் இருவரையும் மீண்டும் ஒன்று சேர்த்து வைக்கமுடியாத நிலையில் இளைஞன் குற்றவாளியாகக் காணப்பட்டு முதல மனைவிக்கு நஷ்டஈடாக 34000 வழங்க வேண்டுமென்றும், ஒரு மாதகாலத்தில் விவாகரத்துக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தனர்

இவர்களின் தீர்ப்பை இரு பகுதியினரும் ஏற்றுக்கொண்டனர்.

## நேபாம்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சோடியம் அல்லது சோடியம்-பொற்றாசியம் கலப்புலோகங்களைக் கொண்ட எரியூட்டும் குண்டுகளும் இருக்கின்றன மக்களைத் திசைதிருப்பி பிழையான வழிகளில் இயங்கச் செய்யப் பண்ணுவதற்காகவே இவ்வகைக் குண்டுகள் எதிரிகளினால் போடப்படுகின்றன ஏனெனில் இவ்வகைக் குண்டுகளை அணைப்பதற்காக நீரைப்பயன்படுத்தினால், இரசாயனத்தாக்கமொன்று ஏற்பட்டு உடனடியாக வெடித்துச் சேதத்தை ஏற்படுத்தும். இவ்வகைசேதங்களை தவிர்ப்பதற்காகவேதான் குண்டுகள் எவ்வகையானவை எனத் தெரியுமுன்பு அவற்றின் மேல் அதிகளவு நீரை ஊற்றுதல் தவிர்க்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது சிறிது சிறிதாக மழைவடிவில் நீரினைப் பரவி விசிறியபோது வெடித்தல் ஏதும் ஏற்படாவிடின் நீரின் அளவை அதிகரிக்கலாம். சோடியம் வகைக் குண்டுகளை அணைக்கவேண்டுமாயின் மணலோ அல்லது மணல் மூட்டைகளோதான் சிறந்தவழியாகும்.

இதுவரை எரியூட்டும் குண்டுகளைப்பற்றியும் அவற்றின் விளைவுகளைப் பற்றியும் கூறியுள்ளோம். இனி, இக்குண்டுகளினால் ஏற்படுத்தப் பட்ட தீயினுள் அகப்பட்டுதீக்காயங்களுக்குள்ளான ஒருவருக்கான முதலுதவிமுறைகளைப் பற்றிப் பார்ப்போம்.

[திங்கள் தொடரும்]

## நிக்கரகுவா

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ரில் 6 தளங்களும் இயங்குவதாக விமானி ஜூலியன் மேலும் தெரிவித்தார்.

'கொன்ட்ரா' படைகளுக்கு விநியோகிப்பதற்காக ஆயுதங்கள் வெடி மருந்துகளை ஏற்றிச் சென்றபோதே இவரது விமானம் சுட்டுவிழ்த்தப்பட்டது

இதில் இருவர் கொல்லப்பட்டனர் இநத இவரின் உடல்களும் நிக்கரகுவாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் கையளிக்கப்பட்டன.

# நவராத்திரி விழா

யாழ்ப்பாணம், சனி

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய நவராத்திரி விழா இன்று சனிக்கிழமை கல்லூரி அதிபர் திரு. மு இராமலிங்கம் தலைமையில் நடைபெறும்.

யாழ். இந்துப் பாடசாலை அதிபர் திரு மு. திருஞானசம்பந்தபிள்ளை கலைமகள்விழா சிறப்புப் பற்றி சொற்பொழிவாற்றுவார். திரு பொன் சுந்தரலிங்கம் இசைக்கச்சேரி நிகழ்த்துவார்.

வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (ச)

### சங்குவேலி

யாழ்ப்பாணம், வெள்ளி

சங்குவேலி தமிழ்க்கலவன் பாடசாலையில் நவராத்திரி விழா நாளைகாலை நடைபெற உள்ளது

இங்கு சிறப்பு நிகழ்ச்சியாக இணுவில் சிவத்திரு. சோதிலிங்கசுவாமி கலந்து கொண்டு பூசை, ஆராதனைகளை நடாத்துவதுடன்மேற்படி பாடசாலையும் சங்குவேலி இந்துமன்றமும் இணைந்து நடாத்திய சமய அறிவுப் போட்டிகளில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசுகளையும் வழங்குவார்.

### கைதடி

யாழ்ப்பாணம், சனி

கைதடி நுணுவில் அபிவிருத்திச் சங்கமும் மாதர் அபிவிருத்திச்சங்கமும் இணைந்து நடாத்தும் நவராத்திரி விழா நாளை ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெறும். [சி]

### மன்னூர்

யாழ்ப்பாணம், சனி

மன்னூர் கோவிற்குளம் தமிழ் வித்தியாலய வாணி விழா இன்று வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

விழாவில் பிரதமவிருந்தினர்களாக விடத்தல்தீவு, கொத்தணிப்பாடசாலை அதிகாரி ஜனாப். எம். ஐ அமீர், திரு. சூசைப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வார்கள். வித்தியாலய அதிபர் திரு சி கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை உப அதிபர் எம். கே. முகைஸ் செய்து வருகிறார், வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்

### சுழிபுரம்

பண்டத்தரிப்பு. வியாழன்

சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலய நவராத்திரிவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை வித்தியாலய அதிபர் திரு எஸ் சண்முகலிங்கம் தலைமையில் சிறப்பாக நடைபெறும். (சி)

### மானிப்பாய்

பண்டத்தரிப்பு, வியாழன்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நவராத்திரி விழா சனிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சிறிகாந்தா தலைமையில் நடைபெறவுள்ளது. (சி)

★ ★

### பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி நவராத்திரி விழா ஞாயிற்றுக்கிழமை கல்லூரி அதிபர் திரு. வே. நாசராசா தலைமையில் நடைபெறும்.

## வவனியாவில் ஆயிரம்பேர் விசாரணை

வவனியா, வெள்ளி

வவனியா நகரத்தை நேற்று முன்தினம் பிற்பகல் திடீரென சுற்றிவளைத்து தேடுதல வேட்டை நடத்திய 500க்கு மேற்பட்ட ஆயுதப்படையினர் சுமார் 1000 பேரைக்கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

நேற்றுப் பிற்பகல் 2 மணி தொடக்கம் நடைபெற்ற இத் தேடுதல் வேட்டையைத் தொடர்ந்து நகரில் பதற்ற நிலை தோன்றியது. வாகனப் போக்குவரத்துச் சேவை நடைபெறவில்லை கடைகள் மூடப் பட்டிருந்தன.

ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட 1000 பேரும் முகமூடிகள் முன்நிறுத்தப் பட்டனர். முகமூடிகள் அடையாளம் காட்டாததைத் தொடர்ந்து நேற்றிரவு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

(மா)


## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ ஜேர்மனி

★ குவைத் ★ சவூதிஅரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் சென்ற வார பயணங்களை வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளார் இதுவரை எமது பல பயணங்கள் வெற்றிகரமாகவும், விரைவாகவும் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனிக்கு செல்ல விரும்பும் பெண்கள் (குறிப்பாக மணம் செய்தவர்கள் மணம் செய்யவிருப்பவர்கள்) உங்களை எமது முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்: 19-ம் திகதிக்கு முன் பயணம் செய்ய உள்ளோம்.

குவைத்தில் Airport Cleaners (ஏயார் போட் கிளீனேர்ஸ்) ஆக வேலை பார்க்க விரும்புபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். செல்ல விரும்புபவர்கள் நேரடியாக பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

சவூதி அரேபியாவிற்கு வீதி அமைப்பு வேலைக்கு பிரயாண ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். விரைவாக அனுப்பிவைக்கப்படுவார்கள். உடன் பாஸ்போட், 6 படங்களுடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு:
N. Bala

பஸ் இல. 764
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

★ உங்கள் நன்மை கருதி தீவுப்பகுதியில் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களா வடிச் சந்தியில் அமைந்துள்ளது.

★ குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் அன்ட் ரூர்ஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

[A-1395]

## பிரயாண ஒழுங்குகள்

# அவசர தேவை

★ சவூதி அரேபியா

(ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்)
5 வருட அனுபவத்துடன்
வயது 25 — 44 வரை.

ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம்.

உடன் பாஸ்போட், 20 படம்

மற்றும்

லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

# யூனிவேசல் ஏஜென்சி

125, ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்.

(பெற்ரேலியம் கூட்டுத்தாபனத்துக்கு முன்பாக, ஆயுர்வேத கல்லூரி அருகாமையில்)

(A 1393)

## பிரயாண ஒழுங்குகள்

அவசர தேவை

★ சவுதி அரேபியா: ஹெவி வெயிக்கிள் பஸ் றைவேஸ்.
5 வருட அனுபவத்துடன். வயது: 25-44 வரை

★ ஸ்கூல் கிளீனேஸ்: 100 பேர்

★ பஸ் கிளீனிங் லேபறேஸ்: 100 பேர்

ஒரு வாரத்தினுள் பிரயாணம் செய்யலாம். உடன் பாஸ்போட், 20 படம், மற்றும் லைசென்ஸ் முதலிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

### டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்

பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு. இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையால் வரவும். [A 1394]

## பிரயாண ஒழுங்குகள்

டென்மார்க், கனடா ஆகிய நாடுகளுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் எமது முகவர் உங்களை அழைத்துச் செல்வார். போகிறவர்கள் உடனடியாக எமது காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

அத்துடன்,

ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் விசாவுடன பிரயாண ஒழுங்கு செய்து தரப்படும.

சிங்கப்பூரில் — பணிப்பெண்கள்
Housemaid, Railway underground general workers இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் 21 நாளில் செய்து கொடுக்கப்படும்.

சவுதி, குவைற்-கிளினர். றைவேஸ்
இவற்றுக்கான வருமான வாய்ப்புக்கள் உடன் செய்து கொடுக்கப்படும்.

# GROUP ATLANTIC

அடைக்கலமாதா கோவில் பின்பக்கம்
163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[A 1390]

## முதலாவது பிறந்ததினம்



### செல்வி பிரம்னி இராமதாசன்

சாவகச்சேரிசாந்தராமா பிக்சர் பலஸ் உரிமையாளர் இராமதாசன் சாந்தகுமாரி தம்பதிகளின் ஏக புதல்வி பிரம்னி தனது 1வது பிறந்தநாளை இன்று 11-10-86 சனிக்கிழமை கைதடி வடக்கில் விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மாமார், அப்பப்பா, அம்மம்மாமார், அம்மப்பாமார், பெரியம்மா, பெரியப்பா, சிவாணி அக்கா, இத்தாலி குகன், குரு சித்தப்பாமார், பிரான்ஸ் ரகு, ராகவன் சித்தப்பாமார், லண்டன் சிறி சித்தப்பா, விஜயன் சித்தப்பா, தேவி, புஷ்பா, தயா, அமரா, அத்தைமார், சித்திமார், மாமாமார், பூட்டிமார் ஆகியோர் இவரைப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(C 5001)

## இன்றைய பலன்

மாதம்- புரட்டாதி
திகதி- 25 (11 - 10 - 86)
கிழமை- சனி
திதி- அட்டமி
காலை 8-38 வரை
நட்சத்திரம்- உத்தராடம்
பி. இ. வரை

மேடம்: கடமையில் அதிக ஆர்வம் பிறக்கும் சிலருக்கு தொழில் துறையிலும் நன் மாற்றங்களும் விளையும். அன்னையின் மூலம், பொருள் வரவுக் கிடமுண்டு.

இடபம்: பொதுத்துறையில் மன நாட்டம் செலுத்துவீர்கள். வேண்டியவளவிற்கு வெள்ளிப்பணம் துள்ளும்: நீண்டநாள் கோரிக்கை இன்று நிறைவேறும்.

மிதுனம்: ஏக்கத்தின் சாயல் தாக்கும்! வாகன விபத்தும் ஏற்படலாம். திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

கடகம்: களஸ்திரசுகமுண்டு கண்ணியம் பிறக்கும் கடமையும் நிலைக்கும் தித்திப்பான தினம்.

சிங்கம்: வீண் பழிக்கு ஆளாவீர்கள். எதையும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுத்தவும். பொறுமையின் நிழல் உங்களைப்பின் தொடரும்.

கன்னி: தந்தையின் ஆசி மூலம் வாழ்க்கை ஆரம்பிப்பீர்கள். தொழில் துறையிலும் விருத்தி உண்டு தெய்வவழிபாடும் மேலோங்கி நிற்கும்.

துலாம்: பெரிய இடத்துச் சிநேகம். இன்று ஏற்படலாம். வாழ்க்கை புதிய நம்பிக்கை உதயமாகும்.

விருச்சிகம்: வாகன விருத்தியுடன், இன சன கொண்டாட்டமும் இடம்பெறும். நீண்டநாள் பிணி இன்று தீரும். பிறர் பொருள் வரவுமுண்டாம்.

தனுசு: ஏமாற்றத்தின் மூலம் விளைவுகள் தென்படும் குடும்பப் பிளவுகள் தோன்றும். மனவேதனை உருவாகும். பன்திடம் விருப்பத்தக்கது.

மகரம்: இன்று எதிலும் நிச்சயமற்ற நிலைமை தென்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஓராண்டு நினைவஞ்சலி



### செல்வரத்தினம் முரளிதரன்

தோற்றம்: 18-11-1964
மறைவு: 22-10-1985
திதி: 11-10-1986

ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டுப்பிரிந்த எமதன்புச் செல்வமே முரளிதரா!

எம்மைவிட்டு நீ பிரிந்தாலும் உன் இன் வதனம் என்றும் எம் நெஞ்சில் நிலைத்தே நிற்கும்.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அம்மா, அப்பா:
சகோதரர்கள்.

5ம் கட்டை,
கோப்பாய் தெற்கு.
கோப்பாய், (C 5115)

## இல்லைவழி எமக்கு இனி

வண்ணைப் பெருமானை வணங்கு மடியவர்க்கு
எண்ணங்கள் கைகூடும் என்றென்றும் - திண்ணமாய்
ஐயா நின் பாதமதை அனுதினம் தொழுவதல்லால்
உய்யும் வழிவே றுளதோ.

வண்ணைப் பெரும்பதியில் வனப்புடனே வீற்றிருக்கும்
கண்ணுநந் தமிழினத்தைக் காப்பாயே - பண்ணினிலே
பாக்கள் தொடுத்து நின் பாதமலர்நான் தொழுதேன்
போக்காயோ ஏனிந்தப் போர்.

காக்குமெம் தெய்வமே கன்னித் தமிழ்மொழியை
தீக்கரங்கள் ஒன்றும் தீண்டாது - ஆக்கமாய்
நல்லவழித்தீர்வொன்றை நல்கியருள் புரிவாய்
இல்லைவழி எமக்கு இனி.

- எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்

★ ★ ★

## தேரேறி வருவான்

மால் அதன் மாயவன் பச்சை
மாமலை மேனி தாங்கி
தூயவன் தூய சென்னி
துயில் கொள்ள பாம்பில் வைத்து
பாமரருக்கு எளியோனாகி
பார்வையை பாரில் வைக்க
தேவரும் சூழ்ந்து நிறக
தேரேறி வருவான் இன்று

- நவாலியூரான்.

★ ★ ★

## வண்ணை வெங்கடேஸ்வரனே!

வண்ணைப்பதி வெங்கடேஸ்வரனே! வைகுந்தனே!
வாழ்வில் இகபரசுகம் அருள்பவனே! முகுந்தனே!
மும்மூர்த்திகளுள் ஒருவனே! லஷ்மிநாராயணனே!
மூவுலகை ஈரடியால் அளந்தவனே! மாயவனே!
அடியார்களுக்கு எளியவனே! கேசவனே! ஸ்ரீரங்கனே
ஆர்த்தபிறவித்துயரினை நீக்குபவனே! மாதவனே!
தஞ்சமென உனை நாம் அடைந்தோம்! அச்சுதனே!
தருவாய் அருள் நீ வண்ணை வெங்கடேஸ்வரனே!

– கௌரி. கணேஷநாதன்.

★ ★ ★

## ஸ்ரீ வெங்கடேசா தேரேறி அருள்வாய்

ஸ்ரீரங்கத்தில் பள்ளிகொண்ட ஸ்ரீநிவாசா
கோவர்த்தன கிரியை குடையாக்கி இடையர்தம்
இனத்தைக்காத்த கோவிந்தா
நீண்டநின் புல்லாங்குழல் இசைகேட்டு உயிரினங்களை
மெய்மறக்கச்செய்த மதுசூதனா
ஈங்கின்று நம் தமிழர்குலத்தின் குரலுக்குச்
செவிசாய்க்க நீ தேரேறிவாராயோ

- சூரியகலா கைலாசபிள்ளை

[வண்ணை ஸ்ரீ வெங்கடேசப்பெருமான் இரதோற்சவம் இன்று]

## அறிவித்தல்


ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை
நோயாளர் நலன்புரிச்சங்கம்.

மேற்படி சங்கத்திலிருந்து 04-10-86 முதல் விலகிக்கொண்டேன்.

டாக்டர் க. லலிதகுமார்

[C 5131]

## முதலாம் வருட நினைவஞ்சலி



### திருமதி சிவராஜினி யோகராசா (ராஜி)

தாயின் மடியில்:
02-01-1964

இறைவனடியில்:
22-09-1985

திதி: 11-10-1986

ஆண்டு ஒன்று ஓடிமறைந்தாலும், பால் முகம் மாறாத உனது அன்புச் சிரிப்பு முகம் எமது மனக் கண் முன்பே நிழலாடிக் கொண்டிருக்கிறது என்றும் எங்கள் ஒளிவிளக்காக அன்புச் சுடராக விளங்கி, ஆறாத்துயரில் எம்மை விட்டுச் சென்ற எங்கள் அன்பின் திருக்கொழுந்தே உனது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிக் கொள்கிறோம்.

என்றும் நீங்காத உன்
நினைவால் வாடும்!
அன்புக் கணவர்,
தந்தை, தாய், பிள்ளைகள்
நிமாலினி உமாராம்,
சகோதரி சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

திரு. திருமதி
சின்னத்துரை,
No 43 யாழ். வீதி
யாழ்ப்பாணம். (C 5123)

## யாழ். கலாசாரப் பேரவையின்
## நாதசுர தவில் பயிற்சி ஆரம்பவிழா

யாழ்ப்பாணம், சனி

யாழ் கலாசாரப் பேரவையின் ஆதரவில் நாதஸ்வர, தவில் பயிற்சி வகுப்புகள் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் விஜயதசமி தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

இப்பயிற்சி வகுப்பு ஆரம்ப விழாவுக்கு கலாசாரப்பேரவையின் யாழ் மாவட்டத் தலைவரான திரு. வை. மு பஞ்சலிங்கம் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினர்களாக சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாதஸ்வர கலாநிதி என். கே. பத்மநாதன், தவில் வித்துவான் என். ஆர். சின்னராசா ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இவ் விழாவில் ஈழத்து நாதஸ்வர, தவில் கலைஞர்களும் பங்கு பற்றுவார்கள். இவ் விழாவில் சகல கலைஞர்களையும் பங்கு பற்றுமாறு யாழ் கலாசாரப் பேரவையின் நாதஸ்வர, தவில் குழுவினர் வேண்டுகின்றனர். (ச - வா)

## கராட்டி வகுப்புகள்

ஆரம்பம்: (11-10-1986) சனி
மாலை 4-00 மணி.
இடம்: யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலயம்
(பெருமாள் கோவில் முன்பாக),
வகுப்புகள்: சனி ஞாயிறு மாலை 4-00
தொடக்கம் 6-00 மணிவரை
நடைபெறும்.

பயிற்சி பெற விரும்புவோர் வகுப்பு நேரங்களில் தொடர்புகொள்ளவும்.

பயிற்சி ஆசிரியர்கள்:
திருவாளர்கள் கணேசலிங்கம், சிவதாசன்.

(C 5126)

## பிரயாண ஒழுங்கு

★ அவுஸ்ரேலியா ★ டென்மார்க்
★ குவைத் ★ சவுதி அரேபியா
★ ஈராக்

ஆகிய நாடுகளுக்கு உடன் பிரயாண ஒழுங்குகள் செய்துகொடுக்கப்படும். போக விரும்புவோர் உடன் தொடர்புகொள்ளவும்,

எல்லாவித தரங்களுக்கும் உடனடி வெற்றிடங்கள் உண்டு

மற்றும் பாஸ்போட், பொண்ட், ரிக்கற்றில், விஸா உடனுக்குடன் செய்துகொடுக்கப்படும்.

விபரங்கட்கு:

M. SHANTHIRAAJ,
Arasady Lane, Irupalai, Kopay

[C 5125]

## GLORIA TRAVELS

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ ஜெர்மனி

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன், டென்மார்க், கனடா செல்வதற்கு உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

GLORIA TRAVELS,
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்

[A-1391]

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
சனிக்கிழமை 11-10-86

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் வீட்டில்

# பல்லாயிரம் ரூபா பொருட்கள் ஆயுதபாணிகள் இருவரால் கொள்ளை

யாழ்ப்பாணம், சனி

இனந்தெரியாத ஆயுதபாணிகளாக வந்த நபர்கள் யாழ். கொட்டடியிலுள்ள வீடொன்றில் புகுந்து பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைச் சூறையாடிச் சென்றனர்.

நேற்று முன்தினமிரவு யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் குமாரவடிவேலுவின் வீட்டிலேயே மேற்படி துணிகரக் கொள்ளை இடம்பெற்றது. தொலைக்காட்சிப் பெட்டி கமரா, அம்பிளிவயர், ரேடியோ, பணம், நகை உட்பட பல பொருள்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

இச்சம்பவம் குறித்துத் தெரிய வருவதாவது:

துப்பாக்கி சகிதம் வந்த இரு நபர்கள் தாம் ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனக் கூறி குறித்த பேராசிரியரின் வீட்டை முகாமாக மாற்றப் போவதாகவும், வீட்டையும், உள் அறைகளையும் திறக்குமாறு துப்பாக்கி முனையில் பணித்துள்ளனர். பீதியடைந்த பேராசிரியர் அறைகளைத் திறந்ததும் ஆயுதபாணிகளான கொள்ளையர்கள் அவரது கண்களையும், வாயையும் துணியால் கட்டிவிட்டுத் தமது கொள்ளை நடகத்தை நடத்தியுள்ளனர்.

மாலை ஏழரை மணியளவில் பிரவேசித்த இந்த ஆயுதபாணிகள், இரவு 9 மணிவரை தமது கொள்ளை நாடகத்தை நடத்தியுள்ளதாகத் தெரிய வருகிறது. இவர்கள் அவ்வீட்டிற்குள் பிரவேசித்த போது பேராசிரியர் தனியாகவே அங்கு இருந்துள்ளார். (எ)

## குண்டு கண்டுபிடிப்பு

கொழும்பு, வெள்ளி

மட்டக்களப்பு திருமலைவீதியில் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்திற்கு சுமார் 100 யார் தொலைவில் வெடிக்காத நிலையில் குண்டொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (கூ-சி)

துப்பாக்கி முனையில் வவனியா

## பிரபலவர்த்தகர் கடத்தப்பட்டார்

வவனியா, வெள்ளி

வவனியா பிரபல வர்த்தகர் சிவபாதம் திருஞானசம்பந்தர் (வயது 33) கடந்த வியாழன் இரவு இனந்தெரியாத நபர்களால் துப்பாக்கிமுனையில் கடத்தப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஹொரவப்பொத்தானை வீதியிலுள்ள தனது வீட்டில் மனைவி, உறவினர்களுடன் இருக்கும் போது அங்கு சென்ற இனந்தெரியாத நபர்கள் பலவந்தமாக வீட்டினுள் சென்று ஏனையோரை துப்பாக்கி முனையில் பணயம் வைத்து இவரை கடத்திச் சென்றனர்.

இச்சம்பவத்தின்போது திரு. திருஞானசம்பந்தரின் வீட்டின் அருகாமையிலிருந்த அவரது மில் காவலாளிகளும், ஊழியர்களும் அவ்விடத்திற்கு வந்தபோது அவர்களும் துப்பாக்கிமுனையில் பணயம் வைக்கப்பட்டனர்.

வவனியாவில் வர்த்தகர் கடத்தப்பட்டது இதுவே முதல் தடவையாகும். இச்சம்பவம் தொடர்பாக வவனியா வர்த்தகர்கள்பலர்கவலை தெரிவித்துள்ளனர்.

கடத்தப்பட்ட இவ் வர்த்தகர் காரைநகரைச் சேர்ந்தவர். (சி)

## சாவகச்சேரியில் பொருட்காட்சி

யாழ்ப்பாணம், சனி

மறுமலர்ச்சிக்கழகமும்மாணவர் முன்னணியும் இணைந்து நடாத்தும் ''எம் மக்களின் எதிர்காலம்நோக்கி'' பொருட்காட்சி சாவகச்சேரி பஸ்நிலைய முன்பாக இம்மாதம் 16ம் தேதி முதல் 19ம் தேதி வரை தினமும் காலை 8-30 மணிமுதல் இரவு 8 மணிவரை நடைபெறும்.

## அபிப்பிராயம் கோரப்படுகிறது

யாழ்ப்பாணம், சனி

யாழ் குடாநாட்டில போக்குவரத்து நடைமுறைகள் சம்பந்தமாக 'தமிழீழ விடுதலைப் புலிகள்' புதிதாக எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி அபிப்பிராயங்கள் கோரப்படுகின்றன. புதிதாக அமுல்படுத்தப்படவிருக்கும் போக்குவரத்து நடைமுறைகள்பற்றி அபிப்பிராயங்கள் தெரிவிப்போர், தங்கள் அபிப்பிராயங்களை விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதி 'புலிகளின் குரல்' பலகைக்கு அருகாமையிலுள்ள பெட்டிக்குள் போடும்படி கேட்கப்படுகின்றனர்.

## கவின்கலையரங்கம்

யாழ்ப்பாணம், சனி

தமிழர் கலாசார அவையினரின் கவின் கலையரங்கம் நாளை பிற்பகல் யாழ் வின்சர் கலையரங்கில் நடைபெறவுள்ளது.

கலைஞர் வேல் ஆனந்தன் நாட்டியாலயம் வழங்கும் ஆடலரங்கு கலைமாமணி செல்வி வர்ணலாதேவியின் மெல்லிசை நிகழ்ச்சி.

வில்லிசைவேந்தன் சர்மாவின் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரின் பாஞ்சாலி சபதம் நடைபெறும். (மா)

## வன்செயலால் பாதிக்கப்பட்டோர்

## விபரம் பெறும் படிவம் மீளப்பெறும் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம் சனி,

1983-ம் ஆண்டு தொடக்கம் வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் எதிர்பார்த்ததை விட கூடுதலாக பொதுமக்களால் பெற்றுக் கொள்ளப்பட்டு வருவதினால் இப்படிவங்களை பொது மக்களிடமிருந்து மீளப்பெறும் திகதி இம்மாதம் 5-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என யாழ் மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் தெரிவிக்கின்றார்.

இவ் விண்ணப்பப்படிவங்களை மீளப் பெறுவதற்கான இறுதித் திகதி நேற்று என முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுவரை இவ்விண்ணப்பப் படிவங்கள் எண்பதாயிரம்வரை விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிகிறது.

இவ்விண்ணப்பப்படிவங்களை நிரப்பிக் கொடுப்பதற்கு பிரஜைகள் குழுவினர் பொதுமக்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றனர். எனவே இவ் விண்ணப்பப்படிவங்களை பெறுகின்றவர்கள் நல்ல முறையில் பத்திரங்களில் தகவல்களைக் கொடுப்பதற்காக அவ்வப்பகுதி பிரஜைகள் குழு உறுப்பினர்களை நாடும்படி வேண்டப்படுகின்றனர். (ச-கே)

## டெல்லி அணி 275-5

புதுடில்லி ஒக்டோபர் 10

ஆஸ்திரேலியா டெல்லி அணிகளுக்கிடையில் பரோடாவில் நடைபெறும் மூன்று நாள் கிரிக்கெட் போட்டியின் முதலாம் நாள் முடிவில் டெல்லி அணி ஐந்து விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 275 ஓட்டங்களைப் பெற்றது.

கீர்த்தி அஸாத் 48 ஓட்டங்களுடனும் நஸாயுத்சர்மா 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதுள்ளனர். ஆஸ்திரேலிய அணி தரப்பில் கில்பேர்ட் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். (சி-கே)

## கொர்பச்சேவ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவரை கிட்லர் விமான நிலையத்தில் ஐஸ்லாந்து ஜனாதிபதி, பிரதமர் உட்பட மற்றும் சில உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

சோவியத் அதிபர் மிக்கயில் கோபர்சேவ் இன்று ஐஸ்லாந்து பயணமாவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐஸ்லாந்தின் உயர்அதிகாரிகள் சோவியத் அதிபரை வரவேற்க சகல ஏற்பாடுகளையும் செய்துள்ளனர். (க)

## விடுதலைப்புலிகள்..

(1ம் பக்க தொடர்ச்சி)

...பப்படுகிறது.

வெளிநாட்டு நிருபர்

பின்லாந்து நிருபர் ஒருவர் இச்சம்பவம் நடைபெற்ற நேரம் போர்க்கோலத்தில் நின்ற விடுதலைப் புலிகளுடன் நின்று கொண்டிருந்தார்.

கொட்டடிப்பகுதியில் பின்லாந்து நிருபர் நின்ற சமயம் யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து ஏவிவிடப்பட்ட ஷெல் ஒன்று விழுந்து வெடித்த போதிலும் அவர் எதுவித காயமுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

யாழ் நகர் எங்கணும் விடுதலைப் புலிப்படையினர் நவீன ஆயுதபாணிகளாகக் காணப்பட்டனர்.

யாழ். கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றிரவு வரை 15 ஷெல்களை ஏவிய வண்ணமிருந்தனர். (மா)

## இலங்கையின் தற்போதைய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கோருமாறும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தமிழ்ப் போராளிகளை எவ்வகையிலும் இலங்கை யோசனைகளை ஏற்றுக்கொள்ளுமாறு இந்திய அரசு கட்டாயப்படுத்த மாட்டாதெனத் தெரிவித்த புதுடில்லி அதிகாரிகள் அவர்களின் பதில்களை நன்றாக பரிசீலனை செய்தபின் தெரிவிக்குமாறும் வேண்டினர்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர் தாம் சென்னை திரும்பியதும் அவர்களுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்துவதாகவும் தனது முயற்சிகளின் பெறுபேறுகளை மத்திய அரசுக்கு அறிவிப்பதாகவும் உறுதியளித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் யோசனைகளைப் போராளிகள் குழுத்தலைவர்கள் அதிக கவனம் கொண்டு பரிசீலனை செய்ய வேண்டுமெனக் கூறிய மத்திய அரசின் பிரதிநிதிகள், எச்சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசின் யோசனைகளுடனோ அல்லது கூட்டணியின் யோசனைகளுடனோ உடன்பட்டு வராவிட்டாலும் அவர்கள் தாம் பரிசீலனை செய்தபின் தமது கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமெனக் கூறினர்.

பிரதமர்ராஜீவ்காந்தி தமது வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்பே இலங்கை அரசுடனான மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை பற்றித் தீர்மானிக்கப்படுமெனவும் அவர்கள் கூறினர். (கே)

## ஆயிரத்துக்கு....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இச் சோதனையின்போது சுமார் 2000 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையம் கூட்டிச் செல்லப்பட்டு அங்கு பலத்த விசாரணையின்பின் சகலரும் விடுவிக்கப்பட்டனர் [சி]

## மரண அறிவித்தல்

### விசுவநாதர் தம்பையா

விசுவநாதர் தம்பையா [தெய்வேந்திரப்பா] [மலாயன் பென்சனியர் வட்டுக்கோட்டை] காலமானார். அன்னார் மகேஸ்வரி சுப்பிரமணியம் [மலேசியா]. லோகராஜா [மின் பொறியியலாளர், நீர்கொழும்பு], அன்னலட்சுமி, பாலகிருஷ்ணன் [மதிப்பீட்டு உதவிப் பணிப்பாளர், கொழும்பு], பாலதேவன் [பொறியியலாளர், வவனியா], வைத்திய கலாநிதி பாலச்சந்திரன் [லண்டன்] ஆகியோரின் அருமை தந்தையாராவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை [12-10-86] ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை கொட்டுத்துறை மயானத்தில் இடம்பெறும்.

(C 5162)

### நயினாதீவு சின்னத்தம்பி சோமசுந்தரம்

நயினாதீவு சின்னத்தம்பி சோமசுந்தரம் காலமானார். இவர் காலஞ்சென்ற கண்மணியின் அன்புக் கணவரும, கந்தசாமி, கனகம்மா, நடராசா, அன்னலட்சுமி, காலம்சென்ற அன்னம்மா, மகாலிங்கம், சந்திரசேகரம் [கிராமசேவையாளர், அனலைதீவு], குணபாலலட்சுமி ஆகியோரின் அன்புத்தந்தையும், கமலாம்பிகை, நடராசா, தெய்வநாயகி, திருநாவுக்கரசு, சிவபாக்கியம், இன்பநாதன், கலைவாணி, காலஞ்சென்ற சிவப்பிரகாசம் ஆகியோரின் அன்பு மாமனுருமாவர். அன்னாரின் தகனக்கிரியை 11-10-1986 சனிக்கிழமை [இன்று] மாலை நயினாதீவில் நடைபெறும். உற்றார், உறவினர் இத்தகவலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

நயினாதீவு,
1986-10-11

தகவல்: சோ. சந்திரசேகரம்.
[C 5151]

## மரண அறிவித்தல்

### கலாநிதி கணபதிப்பிள்ளை ஆறுமுகம்

கலாநிதி கணபதிப்பிள்ளை ஆறுமுகம் அவர்கள் 9-10-86 லண்டனில் காலமானார். இவர் கச்சேரி கிழக்கு ஒழுங்கையில் வசித்தவரும் பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் துறையில் முன்னையநாள் விரிவுரையாளரும், தற்போது லண்டன் நகரப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளரும், (Reader City University London), லிங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், பொன்னியின் அன்புத் தந்தையும், அமரர் இளையதம்பி வைத்தியலிங்கம் என்ஜினியர் அவர்களின் சகலரும், திருமதி ஈஸ்வரி வைத்தியலிங்கம், விக்னேஸ்வரன் [லண்டன்], பரமேஸ்வரன் [பாங்கொக்], ஞானேஸ்வரன் [லண்டன்] ஆகியோரின் மைத்துனருமாவார். ஈமக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்; திருமதி வைத்தியலிங்கம். [A5163]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு அக்டோபர்மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P O Box 49. Telegram Eelanadu Telephone: 22389—24126